**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் ஏனைய வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) அதிகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றுக்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொள்ளல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுதுதுறை கணக்கீட்டு நியமம் 07 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி ரூபா 560,010,287 தொகையான ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் நிதியத்தின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | இந்நிதியத்தின் கணக்கு செயற்பாடுகள் 2006.12. 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்பம் முதல் செலவினங்கள் தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என பகுதிகளாக இனங்கண்டு இறுதிக் கணக்குகள் தயாரித்தல் இதுவரை நடாத்திச் செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 2 சந்தர்ப்பங்களின் போது தாவரப் பூங்காக்களின் அபிவிருத்தி செயற்பாடு களுக்காக செலவிடப்பட்ட மீண்டெழும் தன்மையிலான ரூபா ரூபா. 382,905 ஆன செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குககளை தயாரிக்கும் போது இத்தவறினை திருத்தி செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பிரவேச சீட்டு வருமானம் ரூபா 360,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் கணக்குககளை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் வழிகாட்டல் பத்திரம் மற்றும் பயிர்செய்கை புத்தகங்களின் பெறவேண்டிய வருமானம் ரூபா 401,115 இரண்டு முறை பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | இரண்டு முறை வருமானம் கணக்கிடப்பட்டுள்ளதால் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இருப்பு அறிக்கையின் பிரகாரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு தாவரகூடத்தின் பூ வளர்ப்பு அறிவுறுத்தல் பத்திரங்கள் இருப்பின் கிரயம் ரூபா 394,200 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப இருப்பின் பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | இருப்பு சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் ரூபா 569,940 ஆன பூக்கள் வளர்த்தல் புத்தகங்கள் மற்றும் வழிகாட்டல் பத்திரங்கள் வருமானம் இரண்டு தடவை வருமானமாக கணக்கீடு செய்தமை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை | தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமானம் இரண்டு முறை கணக்கிடப்பட்டுள்ளதால் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பூக்கள் வளர்பு புத்தகங்கள் | 2,990,568 | 2,883,474 | 107,094 | இருப்ப தொடர்பாக மேலும் எஞ்சிய இருப்புக்கள் கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | தவறினை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப்பெறாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கட்டிட அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் காணி அபிவிருத்தி செயற்பாடுகள் என்பவற்றின் கீழ் முறையே ரூபா 6,923,907 மற்றும் ரூபா 6,957,916 கூட்டுத்தொகையான சொத்துக்களின் கீழ் நிரூபணமாக்கப்பட்ட பெறுமதிகளுக்குரிய சொத்துக்கள் எவையென்பது மற்றும் உரிய கொடுப்பனவு உறுததிச்சீட்டுக்கள் பட்டியல்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இப்பதிவுகள் மீண்டும் சீராக்கப்பட்டு சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணக் கூடிய வகையில் பதிவுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சொத்துக்களை மூலதனமாக்கும் போது சரியான பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த நிதியத்தை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்த போதும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2019 மார்ச் ஆந் திகதி அரச நிதி திணைக்களத்தில் இந்நிதியத்தை சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக நடாத்திச் செல்வதற்கு கலந்துரையாடப்பட்டிருந்த போதும் 2020 மே 31 ஆந் திகதி வரை அச்சட்டரீதியான நிதியம் தாபிக்கப் பட்டிருக்கவில்லை | 2019.0.3.01 இல் அரச நிதித் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்நிதியத்தினை சட்டரீதியான நிதியமொன்றாக மாற்றி எதிர்காலத்திலும் நடாத்திச்செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிதியத்தின் செயற்பாடுகளை எதிர்காலத்திலும் நடாத்திச் செல்வது பொருத்தமானதெனவும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன | இந்த நிதியானது சட்டரீதியான நிதியமொன்றாக உருவாக்கப்படவோ வேண்டும் அல்லது கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 103,488,041 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேர்முன்னைய ஆண்டில் மேலதிக நிதியாக ரூபா. 119,721,992 காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 16,233,951 ஆன வீழ்சசியொன்று அவதானிக்கப்பட்டது. இக் குறைவுக்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 18,199,819 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 3,798,758 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.